முதலமைச்சர் வெளியூர் சுற்றுப் பயணத்தில் இருப்பதால் அவர் வந்தவுடனே விடுதலை செய்து அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்துவதைப் பற்றி அரசு முடிவு எடுக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். நிதியமைச்சர் அவர்கள் கூட சட்டமன்றப் பேரவையில் பேசியதாகப் பத்திரிகை வாயிலாகப் பார்த்தேன். ஆனால் தொடர்ந்து அரசு ஊழியர்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். விடுதலை செய்யப்படவில்லை. முதலமைச்சர் அவர்கள் சென்னை நகரத்தில்தான் இருக்கிறார்கள். அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா? மன்றத்திற்கு அதைப்பற்றித் தெரிவிக்க முடியுமா என்பதை அவை முன்னவரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

* **மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** துணைத் தலைவர் அவர்களே, அரசிதழ் பதிவு பெறாத அரசாங்க ஊழியர்கள் சில கோரிக்கைகளை வைத்துப் போராடி வருவதைப்பற்றி இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவந்த நேரத்தில், அரசின் சார்பிலே அன்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறேன். அது பதிவேடுகளிலும் இருக்கிறது. இங்கே நான் கூறும் போது, முதலமைச்சர் அவர்கள் வந்து பேச்சுவார்த்தைகள் நடத்துவார்கள் என்ற அளவில்தான் என்னுடைய வார்த்தைகள் அமைந்திருக்கின்றனவே தவிர, அவர்கள் விடுதலை செய்யப்பட்டு பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்படுவார்கள் என்று என்னைப் பொறுத்தவரையில் சொல்லவில்லை என்பதைத் திரும்பவும் உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு யூனியன் இருக்கிறது என்றால் அவர்களது நிர்வாகப் பொறுப்பில் பலர் இருக்கிறார்கள். இங்கே போராட்டத்தில் ஈடுபட்டு கைது செய்யப்படாத சூழ்நிலையில் உள்ளவர்கள் கூட பேச்சு வார்த்தையில் ஈடுபடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இப்போதுதான் முதலமைச்சர் அவர்கள் பேரவையில் வந்து அறிக்கை கொடுத்திருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அதையெல்லாம் திரட்டி நாளை அல்லது நாளைய மறுதினம் அரசாங்கத்தின் நிலை என்ன என்பதைத் தெரிவிக்க இயலும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(2) விடையளிக்கப்படாமலுள்ள வினாக்கள் குறித்து.

THIRU A. R. DAMODARAN: Sir, yesterday you promised to inform us of the stage at which my questions rest. May I know from you, Sir, about that?

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர் : நானே அதைப்பற்றிச் சொல்வதற்கிருந்தேன். உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன், அவர்கள் நேற்று அவர் கேட்டிருந்த கேள்விகளுக்கு அதற்கான கால வரம்பு கடந்தும் கூட விடைகள் இங்கே வைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் குறிப்பிட்ட

நான்கு கேள்விகளில் ஒன்று 28 ஆம் தேதி நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட இருக்கிறது. மற்ற மூன்றின் விஷயத்தில் விசாரித்தபோது, சம்பந்தப்பட்ட இலாகா மேலும் கொஞ்சம் அவகாசம் கேட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. சீக்கிரம் கொடுத்தாக வேண்டுமென்று அவர்களுக்குத் தகவல் அனுப்பப் பட்டிருக்கிறது. அவையின் சார்பாக அமைச்சர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். சில வினாக்களைக் கவனித்துப் பார்த்தேன். நீண்ட அவகாசம் தேவையில்லாதவையாக இருந்தும் கூட, ஏன் அவ்வளவு அவகாசம் இலாகாவினால் எடுக்கப்படுகிறது என்று தெரிந்துகொள்ள முடியவில்லை. நான் நேரடியாக இலாகாவினரை துரிதப்படுத்த முடியாது. சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் சுற்றறிக்கை அந்தந்த இலாகாக்களுக்கு அனுப்பி வினாக்களுக்கு சீக்கிரமாக விடை அளிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

3. **மேலவை விதி 82ன் கீழ் விளக்க உரை தலைமை அரசு அச்சகத்தில் விபத்துக்கள் விகிதத்தைக் குறைத்ததற்காக தேசீய பாதுகாப்பு விருது அளிக்கப்பட்டிருப்பது குறித்து.**

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இப்போது மாண்புமிகு அரிஜன நல அமைச்சர் திரு. பெ. சௌந்தரபாண்டியன் அவர்கள் அவைக்கு ஒரு அறிவிப்பை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: துணைத் தலைவர் அவர்களே, தலைமை அரசு அச்சகத்தில் விபத்துக்கள் நேரிடும் விகிதத்தைக் குறைக்க எடுத்துக் கொண்ட சீரிய பணியைப் பாராட்டி தேசிய பாதுகாப்பு விருது அளிக்கப்பட்டிருக்கிறது.

உடல் ஊனமுற்றோரை அதிக அளவில் பணியில் அமர்த்தியுள்ள நிறுவனங் களிலேயே, இந்தியாவில் முதலிடம் வகிக்கும் நிறுவனம், சென்னையிலுள்ள அரசு அச்சகம்தான், என்பதற்காகக் குடியரசுத் தலைவர் விருது கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த அச்சகத்தில் பணிபுரியும் 3,527 பணியாளர்களில் 106 பேர் உடல் ஊனமுற்றோர் என்பது குறிப்பிடத் தக்கது.

இரு விருதுகளும் கிடைக்கின்ற வாய்ப்பு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய தலைமையில் இயங்கும் தமிழக அரசு நடத்தும் அச்சகத் திற்குக் கிடைத்திருக்கிறது என்கிற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த அவைக்கும் நாட்டுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.